# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
## திருச்சிராப்பள்ளி - 620 024.

பேரா. லெ. கணேசன்
பதிவாளர் (பொ.)

தொலைப்பேசி: 0431-2407092
தொலைப்படி: 0431-2407045

**கடித எண்:36997/D1/2019, நாள்: 01.03.2022**

பெறுநர்

முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்து கல்லூரிகள்

அய்யா / அம்மையீர்,

பொருள்: பா.ப.க. - பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் - 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் மாற்றியமைக்கப்படவுள்ள பல்வேறு கட்டணங்கள் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. ஆட்சிக்குழுத் தீர்மானம் எண் 2022.07,நாள்:14.02.2022
2. ஆட்சிக்குழுத் தீர்மானம் எண் 2022.10,நாள்:14.02.2022
3. ஆட்சிக்குழுத் தீர்மானம் எண் 2022.17.நாள்:14.02.2022

----

பார்வையில் காணும் ஆட்சிக்குழுத் தீர்மானங்களின் அடிப்படையில், 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் நடைபெற்றுவரும் பாட வகுப்புகளுக்கான நிரந்தர இணைவுக் கட்டணம் மற்றும் தற்காலிக இணைவு நீட்டிப்பு கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்ற தகவலை கனிவுடன் தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

1. நிரந்தர இணைவிற்கான இணைவுக்கட்டணம்: **(Permanent Affiliation Fee)**

| PERMANENT AFFILIATION FEE | Existing Fee | Revised Fee |
|---|---|---|
| U.G. Programme | 1,00,000 | 1,25,000 |
| P.G. Programme | 2,00,000 | 2,25,000 |

2. தற்காலிக இணைவு நீட்டிப்புக் கட்டணம்: **(Extension of Provisional Affiliation Fee)**

இணைவு பெற்ற கல்லூரிகளில் தற்காலிக இணைவு பெற்று பயிற்றுவிக்கப்படும் இளநிலை மற்றும் முதுநிலை பாட வகுப்புகளுக்கான தற்காலிக இணைவு நீட்டிப்புக்கட்டணம் செலுத்துவதில் எவ்வித மாற்றமுமில்லை. மேலும், கீழ்க்காணும் பாட வகுப்புகளுக்கும் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் ஆண்டுதோறும் நிலையாக ஒவ்வொரு பாட வகுப்பிற்கும் கீழ்க்கண்டவாறு தற்காலிக இணைவு நீட்டிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

| Sl. No. | Particulars | Amount (per Course) |
|---|---|---|
| 01 | Certificate Course | 6,000.00 |
| 02 | Diploma Course | 10,000.00 |
| 03 | P.G. Diploma Course | 12,000.00 |
| 04 | M. Phil. Programme | 16,000.00 |
| 05 | Ph.D. Programme | 30,000.00 |

…2

3. **நிரந்தர இணைவாணை பெறுவதற்கான காலம்:**

இணைவு பெற்ற கல்லூரிகளில் தற்காலிக இணைவு பெற்று நடைபெற்று வரும் பாட வகுப்புகளுக்கு பதினைந்து ஆண்டுகளுக்குள் நிரந்தர இணைவாணை பெற வேண்டும் என்பது முப்பது ஆண்டுகளாக உயர்த்தப்படுகிறது. எனினும் தேசிய தர நிர்ணயக் குழுவிற்கு (NAAC) விண்ணப்பிக்க தேவைப்படும் கல்லூரிகள் முன்னரே விண்ணப்பித்து நிரந்தர இணைவாணை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

4. **நிரந்தர இணைவாணை:**

நிரந்தர இணைவாணை வழங்குவது தொடர்பாக, ஆய்விற்கு செல்லும் ஆய்வுக்குழு உறுப்பினர்களது ஆய்வறிக்கையில் ஏதேனும் நிபந்தனைகள் இருப்பின், அந்நிபந்தனைகள் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்கப்படும். அதனை மூன்று மாதத்திற்குள் நிறைவேற்றியதாக முதல்வர் தெரிவித்தப் பின்னர், அதனடிப்படையில் நிரந்தர இணைவாணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

5. **பயிற்றுமொழிச் சான்றிதழ்:**

இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் ஒப்புதல் பெற்ற நிறுவனங்களில் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு தமிழ் வழி பயிற்றுமொழிச் சான்றிதழ் (PSTM) வழங்குவதற்கான கட்டணம் ரூ.500/- எனவும் ஆங்கில வழி பயிற்றுமொழிச்சான்றிதழ் Medium of Instruction in English) வழங்குவதற்கான கட்டணம் ரூ.1000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டு, 01.03.2022 முதல் நடைமுறைக்கு வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.

6. **இணைவு நிரந்தர இரத்துக் கட்டணம்:**

இணைவு பெற்ற கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் தற்காலிக / நிரந்தர இணைவாணை பெற்ற பாட வகுப்புகளை நிரந்தரமாக இரத்து செய்யக் கோரும் நிலையில், ஒவ்வொரு பாட வகுப்பிற்கும் ரூ.10,000/- செலுத்த வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7. **மாற்றுச்சேர்க்கைக் கட்டணம்:**

பிற பல்கலைக்கழகங்களிலிருந்து இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் தொலைக்கல்வி மையத்தில் இரண்டாமாண்டு / மூன்றாமாண்டில் மாற்றுச்சேர்க்கை (Other University Transfer Admission) அடிப்படையில் அனுமதி பெற்று சேர்க்கை செய்யப்படும் மாணவர்களுக்கு கீழ்க்காணும் கட்டணங்களுடன் கூடுதலாக *ரூ.1000/- மட்டும் மாற்றுச்சேர்க்கைக் கட்டணமாக (Transfer Fee) நிர்ணயிக்கப்பட்டு 01.03.2022 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

| Sl. No. | Particulars | Amount (Rs) | | |
|---|---|---|---|---|
| | | II Year | III Year | CDE (II/III Year) |
| 1 | Matriculation Fee | 100.00 | 100.00 | 100.00 |
| 2 | Recognition Fee | 250.00 | 250.00 | 250.00 |
| 3 | Registration Fee | 100.00 | 100.00 | 100.00 |
| 4 | Combination for attendance Fee | 500.00 | 500.00 | -- |
| 5 | Fee for development Infrastructure facility | 40.00 | 40.00 | 40.00 |
| 6 | Cultural Fee | 50.00 | 50.00 | -- |
| 7 | Sports Fee | 300.00 | 100.00 | -- |
| 8 | Youth Development Fee | 45.00 | 15.00 | -- |
| 9 | Transfer Fee | *1000.00 | *1000,00 | *1000.00 |
| | TOTAL | 2385.00 | 2155.00 | 1490.00 |

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பதிவாளர் (பொ.)

நகல்:
1. தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
2. நிதி அலுவலர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
3. இயக்குநர், தொலைக்கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
4. இயக்குநர், ஆராய்ச்சி பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
5. இயக்குநர், கல்லூரி மற்றும் பாடத்திட்ட வளர்ச்சிக்குழு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24